Registered as News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM    PEOPLES DAILY    மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022    ஐப்பசி 18    (04 - 11 - 1991)    திங்கட்கிழமை    ஓசை: 259

## அரச ஊழியர் சம்பளம் 500 ரூபாவால் அதிகரிப்பு?

அரசாங்க ஊழியர்களின் மாதாந்தச் சம்பளம் ஐந்நூறு ரூபாவினால் அதிகரிக்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் 12ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவிருக்கும் வரவு செலவுத் திட்டத்தில் இந்த அதிகரிப்பு இடம்பெறவுள்ளதாகவும், அதிகரிக்கப்படவிருக்கும் இத்தொகை ஒய்வூதியம் பெறுபவர்களுக்கும் வழங்கப்படவிருப்பதாகவும் கூறப்படுகிறது. கடந்த வரவு செலவுத் திட்டத்தில் கூட்டுத்தாபன ஊழியர்கள் அல்லாதோருக்கு மட்டுமே சம்பள உயர்வு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இம்முறை கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது.

# யுத்தக் கைதிகளான 40 பொலீஸாரை உறவினர் பார்வையிட அனுமதி

இலவச இணைப்பு
1982 தொடக்கம் மண்மீட்புக்காய் உயிர் நீத்த மாவீரர்களின் குறிப்பேடு இணைக்கப்பட்டுள்ளது.

## மனிதாபிமான அடிப்படையில்! தலைவர் பிரபாகரன் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யுத்தக் கைதிகளாக விடுதலைப் புலிகள் இயக்கத்தால் பிடிக்கப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கும் 40 சிங்கள பொலீஸாரை அவர்களது உறவினர்கள் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மனிதாபிமானத்தின் அடிப்படையில் இந்த அனுமதியை தலைவர் பிரபாகரன் வழங்கியுள்ளார்.

கடந்த வருடம் ஜூன் மாதம் சிறிலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் மத்தியில் ஏற்பட்ட போரைத் தொடர்ந்து வடமாகாணத்தில் கைது செய்யப்பட்ட 40 சிங்களப் பொலிசாரும் கடந்த 18 மாதங்களாக வடக்கு - கிழக்கில் போர்க் கைதிகளாக விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் அடிக்கடி சென்று பார்வையிடுவதற்கும் விடுதலைப் புலிகள் அனுமதித்திருந்தனர்.

நீண்டகாலமாக சிறைக் கைதிகளாக இருந்து வரும் இந்தப் பொலிசாரை இவர்களது பெற்றோர், மனைவியர், உறவினர்கள் யாழ்ப்பாணம் வந்து பார்வையிடுவதற்கு தலைவர் பிரபாகரன் அனுமதி வழங்கியுள்ளார். தலைவரின் இந்த முடிவு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகளுக்கு சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரின் இந்த மனிதாபிமான, நல்லெண்ண சமிக்ஞையை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் சிறிலங்கா அரசுக்கு அறிவித்திருப்பதாக தெரியவருகிறது



## 3500 மாவீரர்களின் உடல்களை தன்னிடம் கொண்டது இந்த மண்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் எமது மண் எத்தனையோ வீரர்களின் குருதியையும் உடல்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்த மண்ணிலிருந்து எதிரிப் படைகளை விரட்டியடிக்கும் பொருட்டு போர் முனையில் மடிந்தவர்களும் எதிரியிடம் உயிருடன் பிடிபடோம் என்று சயனைட் அருந்தியவர்களுமாக 3500 மாவீரர்கள் தம்மை இந்த மண்ணுக்கே அர்ப்பணித்துவிட்டனர்.

இவ்வாறு தமிழீழ மாவீரர் நாளையொட்டி வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச் செய்திக் குறிப்பில்மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, போர்முனையில் தீரமுடன் போராடிப் பல சாதனைகளையும் வெற்றிகளையும் நிலை நாட்டிய பல மாவீரர்களை பல மக்கள் நேரடியாக அறிந்திருக்கவில்லை. இதனால் அவர்களை நினைவுகூரும் வாய்ப்பும் மக்களுக்கு இருக்கவில்லை. தமிழீழத்தின் எங்கோ ஒரு மூலையில் இருந்துகொண்டு தமிழீழ தேசத்திற்காகவும் மக்களின் விடுதலைக்காகவும் எதிரிப் படைகளுடனும் போராடு மாவீரர்களை அனைத்தும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## அத்தியாவசியப் பொருள்கள் கொள்வனவு செய்ய கூட். சங். தயாராய் உள்ளன

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டிற்கு வெளியில் இருந்து எடுத்துவரப்படும் அத்தியாவசியப்பொருள்களை கொள்வனவு செய்வதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் தயாராக இருக்கின்றன.

பொருள்கள் எந்த அளவில் இருப்பினும் மொத்தமாக விலைகொடுத்து கொள்வனவு செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. (க)

## தொண்டமானின் முயற்சி தோல்விகண்டுள்ளது -ஒப்சேவர் கருத்து

(கொழும்பு)

தமிழீழவிடுதலை புலிகளுக்கும், அரசுக்குமிடையே நடந்துவரும் பேசரை முடிவுக்குக் கொண்டுவருவது குறித்து அமைச்சர் எஸ். தொண்டமான் புதிய பேச்சுவார்த்தைகளை நடாத்த மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி கண்டு இருப்பதாக சண்டே ஒப்சேவர் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சர் தொண்டமான் மத்தியஸ்தராக இருந்து அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடாத்த விடப்பட்ட அழைப்பை புலிகள் நிராகரித்திருப்பதோடு அவர்கள் போரைத் தொடர்ந்து நடாத்த உறுதி பூண்டுள்ளதாக இப்பத்திரிகைச்செய்தி கூறுகிறது.

புலிகள் நடாத்தும் வானொ

(4ஆம் பக்கம் பார்க்க)

## சிங்களக் குடியேற்ற விஸ்தரிப்பு; சிங்கள உ.அ.அதிபர்கள் ஆராய்வு

(திருக்கோணமலை)

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பணியாற்றும் சிங்கள உதவி அரசாங்க அதிபர்களுக்கான கருத்தரங்கு நேற்றும், நேற்றுமுன்தினமும் திருக்கோணமலையில் வடமாகாண ஆளுநர் நலின் செனிவரத்தின சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைத்த இக்கருத்தரங்கில் சிரேஷ்ட ஆணையாளர் சாந்த சிறிமி விக்கிரமாராச்சி, வடமேல் மாகாண காணி ஆணையாளர் கே. எச். அபயகூன் ஆகியோரும் உரையாற்றினர்.

## வவுனியாவில் மிதிவெடியில்

## அதிருப்தியாளர் பேரணியில்

குறிப்பேடு இணைக் கப்பட்டுள்ளது.

# மனிதாபிமான அடிப்படையில்! தலைவர் பிரபாகரன் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யுத்தக் கைதிகளாக விடுதலைப் புலிகள் இயக்கத்தால் பிடிக்கப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கும் 40 சிங்கள பொலிஸாரை அவர்களது உறவினர்கள் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது. மனிதாபிமானத்தின் அடிப்படையில் இந்த அனுமதியை தலைவர் பிரபாகரன் வழங்கியுள்ளார்.

கடந்த வருடம் ஜூன் மாதம் சிறிலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் மத்தியில் ஏற்பட்ட போரைத் தொடர்ந்து வட மாகாணத்தில் கைது செய்யப்பட்ட 40 சிங்களப் பொலிசாரும் கடந்த 18 மாதங்களாக வடக்கு - கிழக்கில் போர்க் கைதிகளாக விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் அடிக்கடி சென்று பார்வையிடுவதற்கும் விடுதலைப் புலிகள் அனுமதித்திருந்தனர்.

நீண்டகாலமாக சிறைக் கைதிகளாக இருந்து வரும் இந்தப் பொலிசாரை இவர்களது பெற்றோர், மனைவியர், உறவினர்கள் யாழ்ப்பாணம் வந்து பார்வையிடுவதற்கு தலைவர் பிரபாகரன் அனுமதி வழங்கியுள்ளார். தலைவரின் இந்த முடிவு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகளுக்கு சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரின் இந்த மனிதாபிமான, நல்லெண்ண சமிக்ஞையை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் சிறிலங்கா அரசுக்கு அறிவித்திருப்பதாக தெரியவருகிறது.



# 3500 மாவீரர்களின் உடல்களை தன்னிடம் கொண்டது இந்த மண்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் எமது மண் எத்தனையோ வீரர்களின் குருதியையும் உடல்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்த மண்ணிலிருந்து எதிரிப் படைகளை விரட்டியடிக்கும் பொருட்டு போர் முனையில் மடிந்தவர்களும் எதிரியிடம் உயிருடன் பிடிபடோம் என்று சயனைட் அருந்தியவர்களுமாக 3500 மாவீரர்கள் தம்மை இந்த மண்ணுக்கே அர்ப்பணித்துவிட்டனர்.

இவ்வாறு தமிழீழ மாவீரர் நாளையொட்டி வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச் செய்திக் குறிப்பில்மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, போர்முனையில் தீரமுடன் போராடிப் பல சாதனைகளையும் வெற்றிகளையும் நிலை நாட்டிய பல மாவீரர்களை பல மக்கள் நேரடியாக அறிந்திருக்கவில்லை. இதனால் அவர்களை நினைவுகூரும் வாய்ப்பும் மக்களுக்கு இருக்கவில்லை. தமிழீழத்தின் எங்கோ ஒரு மூலையில் இருந்துகொண்டு தமிழீழ தேசத்திற்காகவும் மக்களின் விடுதலைக்காகவும் எதிரிப் படைகளுடனும் போராடி மாவீரர்களான அனைத்தும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## அத்தியாவசியப் பொருள்கள் கொள்வனவு செய்ய கூட். சங். தயாராய் உள்ளன

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டிற்கு வெளியில் இருந்து எடுத்துவரப்படும் அத்தியாவசியப்பொருள்களை கொள்வனவு செய்வதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் தயாராக இருக்கின்றன.

வியாபார நோக்கத்திற்காக துவிச்சக்கர வண்டிகளிலும் ஏனைய முறைகளிலும் குடாநாட்டிற்குள் எடுத்து வரப்படும் அத்தியாவசியப் பொருள்களுக்கு உரிய விலையைக் கொடுத்து கொள்வனவு செய்வதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்து பாவனையாளர் பாதுகாப்புக்குழுக்கள் எந்நேரமும் தயாராக இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது மேற்படி அத்தியாவசியப் பொருள்கள் எந்த அளவில் இருப்பினும் மொத்தமாக விலைகொடுத்து கொள்வனவு செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. (ஈ)

## தொண்டமானின் முயற்சி தோல்விகண்டுள்ளது -ஒப்சேவர் கருத்து

(கொழும்பு)

தமிழீழவிடுதலை புலிகளுக்கும், அரசுக்குமிடையே நடந்து வரும் போரை முடிவுக்குக் கொண்டுவருவது குறித்து அமைச்சர் எஸ். தொண்டமான் புதிய பேச்சுவார்த்தை களை நடாத்த மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி கண்டு இருப்பதாக சண்டே ஒப்சேவர் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சர் தொண்டமான் மத்தியஸ்தராக இருந்து அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடாத்த விடப்பட்ட அழைப்பை புலிகள் நிராகரித்திருப்பதோடு அவர்கள் போரைத் தொடர்ந்து நடாத்த உறுதி பூண்டுள்ளதாக இப்பத்திரிகைச்செய்தி கூறுகிறது.

புலிகள் நடாத்தும் வானொ

(4ஆம் பக்கம் பார்க்க)

# சிங்களக் குடியேற்ற விஸ்தரிப்பு; சிங்கள உ.அ.அதிபர்கள் ஆராய்வு

(திருக்கோணமலை)

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பணியாற்றும் சிங்கள உதவி அரசாங்க அதிபர்களுக்கான கருத்தரங்கு நேற்றும், நேற்றுமுன்தினமும் திருக்கோணமலையிலுள்ள மாகாண தலைமைச் செயலாளரின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

இக்கருத்தரங்கில் காணி விடயங்கள் தொடர்பாக அதாவது சிங்கள குடியேற்றவாசிகளைப் புனர்வாழ்வளித்தல் என்ற போர்வையின்கீழ் குடியமர்த்துவது தொடர்பாக சிங்கள உதவி அரசாங்க அதிபர்களுக்கு அறிவுறுத்துரைகள் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் நளின் செனிவரத்தின சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைத்த இக்கருத்தரங்கில் காணி ஆணையாளர் சரத்சிறிவிக்கிரமாராச்சி, வட மேல் மாகாண காணி ஆணையாளர் கே. எச். அபயகூன் ஆகியோரும் உரையாற்றினர்.

## வவுனியாவில் மிதிவெடியில் சிக்கிய நால்வர் படுகாயம்

(வவுனியா)

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கிச் சென்ற நால்வர் மிதிவெடியில் சிக்குண்டு படுகாயமடைந்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

வசாவிளானைச் சேர்ந்த வெற்றிவேலாயுதம் (40 வயது) உருத்திரபுரத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் முருகேசு (52 வயது) யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சதாசிவம் மகேந்திரராசா (38 வயது) கிளிநொச்சியைச் சேர்ந்த செல்லையா (35 வயது) ஆகிய இவர்களே மிதிவெடியில் சிக்குண்டவர்களாவர். இவர்கள் தற்போது அவசர சிகிச்சைக்காக இராணுவத்தினரால் அநுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# அதிருப்தியாளர் பேரணியில் பாரிய குண்டு வெடிப்பு

## பலர் காயம்; வாகனங்கள் சேதம்

ஐக்கிய தேசியக்கட்சியின் அதிருப்தியாளர்கள் நடாத்திய பேரணியில் சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் பலர் காயமடைந்துள்ளனர். இதில் நால்வர் மிகமோசமான காயங்களுக்கு இலக்காகினர் என்று ஏஜென்சிச் செய்திகள் கூறுகின்றன.

குருநாகல மாவட்டத்திலுள்ள பன்னல நகரில் முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்காவினால் ஒழுங்கு செய்யப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பொருள்கள் கொண்டுவர எவரும் தடைவிதிக்கவில்லை யாழ்.அரசஅதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்குள் பொருள்களை எடுத்து வருவதற்கு எவருக்கும் தடை விதிக்கப்படவில்லை என்று யாழ். அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

நேற்று யாழ். செயலகத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள் விநியோகம் தொடர்பாக நடைபெற்ற விசேட கூட்டத்தைத் தொடர்ந்து அரசாங்கஅதிபர் இவ்வாறுகூறியிருக்கிறார். குடாநாட்டிற்குள் உணவுப்பொருள்களை எடுத்து வருபவர்களிடம் இருந்து உரிய விலையைக் கொடுத்து கொள்வனவு செய்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டுத் தாக்குதலுக்கு அரசாங்கமே பொறுப்பு

பன்னல நகரில் நேற்று நடத்தப்பட்ட குண்டு வெடிப்புத் தாக்குதலுக்கு அரசு தான் காரணம் என்று முன்னாள் அமைச்சர்காமினி திசநாயக்கா

(4ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் பாதுகாப்புத் தீவிரம் நாளுக்கு நாள் மாறும் ஒழுங்கு

(கொழும்பு)

வியாழக்கிழமை கொழும்பில் ஆரம்பமாக இருக்கும் 'சார்க்' உச்சி மாநாட்டை முன்னிட்டு பலத்தபாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அது நாளுக்கு நாள் வெவ்வேறு முறையில் அமைந்துள்ளதாகவும் கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கேந்திர இடங்களில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா முப்படையினரும் தனித்தனியாகவும், கூட்டுச்சேர்ந்தும் இந்தப் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்றும், வாகனச் சோதனைகள் பரவலாக நடைபெறுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேநேரம் 'சார்க்' இல் கலந்துகொள்ளும் தலைவர்கள் வரும் 8 ஆம் திகதி கண்டிக்கு விஜயம்செய்வார்கள் என்றும் இந்தியா, நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளின் தலைவர்கள் கண்டி தலதாமாளிகைக்குச் செல்வார்கள் என்றும்,

பாகிஸ்தானிய பிரதமர் நவாஸ் ஷெரீப், மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கயூம் ஆகியோர் கண்டி மீராமக்கம் பள்ளிவாசலில் நடைபெறும் வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகையில் கலந்துகொள்வர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# வடக்கில் இராணுவம் எதையும் பெரிதாக சாதித்துவிடவில்லை

## பி.பி.ஸி அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் சிறிலங்கா இராணுவம் சில பகுதிகளில் நிலை கொண்டுள்ளதே தவிர பிரமாதமாக எதுவும் சாதித்துவிடவில்லை என்று பி. பி. ஸி. அதன் சிங்களச் செய்தி ஒலிபரப்பில் தெரிவித்தது. இதேவேளை வடபகுதியில் இராணுவத்தினரால் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகவும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பதவி வெற்றிடங்கள்

பிரபல நிறுவனமொன்றின், புள்ளி விபரப் பிரிவில் பின்வரும் பதவிகளுக்கு தகுதியானோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. புள்ளி விபரவியலாளர் --

புள்ளி விபரவியல் பட்டதாரி அல்லது இத்துறையில் போதிய அனுபவம் பெற்ற ஒருவர்;

2. லிகிதர் --

குறைந்தது க. பொ. த (உ/த) இல் கணிதத்தையொரு பாடமாகக் கொண்ட ஒருவர்.

விண்ணப்ப முடிவு திகதி;- 12-11-91

விளம்பர இலக்கம் மே/பா 121
ஈழநாதம்
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

[B/3430]

---

அரசாங்க
## அறிவித்தல்

அரசாங்க சேவையிலும், மாகாண அரசாங்க சேவையிலும் எழுதுநர்தரங்களுக்கு அமைய அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை - 1991.

1991-09-25-ம் திகதிய வர்த்தமானியில் வெளிவந்த மேற்படி விடயம் தொடர்பான அறிவித்தலுக்கு மேலதிகமானது. மேற்படி போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி 08-11-1991-ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றேன்.

இ. தர்மகுலசிங்கம்

அரசாங்க அதிபரும்,
மாவட்ட
ஆணையாளரும்
முல்லைத்தீவு.

கச்சேரி
முல்லைத்தீவு

(B/3429)

---

## நினைவு கூருகின்றோம்...

**1991 -11 - 04**



மேஜர்
சஞ்சிகா

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் காரைநகர்/களபூமி, வீமன்காமம், கோண்டாவில் பகுதிகளில் இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட தாய், தந்தை, மூன்று பிள்ளைகள் மற்றும் ஒரு சிறுவன் உட்பட 12 தமிழர்கள்

1988 ஆம் ஆண்டு பச்சனூர்ப் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொலைப்பட்ட எமது உதவியாளர் காவிராஜா

இணுவில் பகுதியில் தேசவிரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளரான காங்கேசன் துறையைச் சேர்ந்த கனகசபை தனபாலசிங்கம்

புங்குடுதீவில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட புங்குடுதீவு, 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 8 தமிழ் கடற்றொழிலாளர்கள்

1990 ஆம் ஆண்டு மாவிட்டபுரம், தச்சன் காட்டுப்பகுதியில் சிறிலங்காப் படையினரின் மினிமுகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது காயமுற்று வீரமரணமெய்திய

மேஜர் சஞ்சிகா (கலைச்செல்வி சுந்தரராஜ்- 'குறளகம்' கரவெட்டி கிழக்கு

றொபேக்கா (வனிதா பொன்னையா - தம்பசாயம், பளை)

பவித்தா (பாலசாந்தினி பாலசிங்கம் குப்பிளான் தெற்கு, ஏழாலை)

மாங்குளம் முகாம் பகுதியில் சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரமரண மெய்திய

லெப். மறவன் (லிங்கராஜா சிறிகாந்தரூபன் - முள்ளைத்தீவு)

திருக்கோணமலை, நெடுங்கேணிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின்போது வீரமரண மெய்திய

லெப். கனகு (தியாகராசா லோகேஸ்வரன் - மேன்காமம்)

இலட்சுமணன் (தில்லையம்பலம் தியாகராசா-கிண்ணியா)

கணேஷ் (டேவிற்சில்வா விக்னேஸ்வரன் - தம்பலகாமம்)

மன்னார், விடத்தல்தீவுப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி (B/3428)

---

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## வீரவேங்கை மேஜர் சஞ்சிகா

(சுந்தரராஜ் - கலைச்செல்வி)

வீரஜனனம்: 18 - 04 - 1969 வீரமரணம்: 04 - 11 - 1990



விடுதலை வேள்வித் தீயில்
வேங்கையாய் வெந்து மாண்டாய்
நடு நிலை தவறா நங்கை
நானிலம் என்றும் போற்ற
கொடுத்தாயே உன்றன் ஆவி

உன்றனை நாளும் எண்ணி
உளம் நைந்து வாடுகின்றோம்
அன்பினைச் சொரிந்தாய் எங்கள்
அனைவரின் மீதும் என்றும்
வன்பகை விரட்டுதற்கு

ஈழநாதம்
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.
[B/3430]

ஆனையானரும்
முல்லைத்தீவு.

கச்சேரி
முல்லைத்தீவு
(B/3429)

படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது உதவி
பாலர் காளிராஜா
இணுவில் பகுதியில் தேசவிரோதிகளினால் சுட்டுக்
கொல்லப்பட்ட எமது ஆதரவாளரான [illegible]
[illegible] சேர்ந்த கனகசபை தனபாலசிங்கம்
புங்குடுதீவில் இந்தியப் படையினரால் சுட்டுக்

கூறுகின்றோம்.
- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி (B/3428)

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## வீரவேங்கை மேஜர் சஞ்சிகா

( சுந்தரராஜ் - கலைச்செல்வி )



**வீரஜனனம்: 18 - 04 - 1969**

**வீரமரணம்: 04 - 11 - 1990**

விடுதலை வேள்வித் தீயில்
வேங்கையாய் வெந்து மாண்டாய்
நடு நிலை தவறா நங்கை
நானிலம் என்றும் போற்ற
கொடுத்தாயே உன்றன் ஆவி
கொடுங் கோன்மை வீழ்ந்து மாள
விடுத்தாயே போக வாழ்வு
வீரம் வாழ் சுவர்க்கம் சேர

உன்றனை நாளும் எண்ணி
உளம் நைந்து வாடுகின்றோம்
அன்பினைச் சொரிந்தாய் எங்கள்
அனைவரின் மீதும் என்றும்
வன்பகை விரட்டுதற்கு
வனிதை நீ துறந்தாய் எம்மை
உன்னுடல் மறைந்திட்டாலும்
உன்னுணர்வுயிர் என்றும் வாழும்



வீர சுவர்க்கம் அடைந்த தியாகச் சுடர் மேஜர் சஞ்சிகாவின் ஈமக் கிரியையின் போது வருகைதந்து அனுதாபம் தெரிவித்த எல்லோருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியை இயம்புகின்றோம். 4 - 11 - 1991 திங்களன்று காலை எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியில் பங்கு பற்றி மதிய உணவு வைபவத்திலும் கலந்துகொண்டு அன்று மாலை அத்துளு அம்மன் கோயிலடியில் நிகழவிருக்கும் அஞ்சலிக் கூட்டத்திற்கும் வருகை தருமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"குறளகம்"
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

அப்புச்சு, அம்மத்தாய்,
தந்தை, பெரியதாய்
சகோதர, சகோதரிகள்.

(B/3420)

## ❋ சிந்தனைக்கு ❋

இலட்சியம் சாதனங்களை நியாயப்படுத்தும்
-மேத்யூ ப்ரையர்


# ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 04-11-1991
தொலைபேசி
அலுவலகம்: 025 - 2839 நிர்வாகம்: [illegible]
த.பெ.எண் 05


## பிராந்திய விவகாரமாக அங்கீகாரம்

இந்தியாவைப் பொறுத்து புலிகளின் விவகாரம் ஒரு தேசிய பிரச்சினை என்றே இந்தியா கருதுகின்றது. இதன் காரணமாகவே புலிகளுக்கு எதிராக தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா எடுக்கும் நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு அனைத்து உதவிகளையும் வழங்கி வருகின்றது என சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய இந்தியப் பாதுகாப்பு இணை அமைச்சர் கிருஷ்ணகுமார் தெரிவித்தார்.

இலங்கையில் வடக்கு கிழக்கு பிரதேசங்களின் பிரச்சினையாக ஆரம்பித்து, பின்னர் இலங்கையின் தேசிய பிரச்சினையாகி தற்பொழுது இந்தியாவின் தேசிய பிரச்சினையாகவும் இலங்கைத் தமிழரின் விவகாரம் மாறியுள்ளது. இந்தியாவின் தேசிய பிரச்சினையாக இது மாறியமையால் இதுவொரு தென்னாசியாவின் பிராந்தியப் பிரச்சினை எனவும் திட்டவட்டமாகக் கூறலாம்.

ஆனால் இந்தியா கூறுவதுபோல் புலிகளின் விவகாரம் இந்தியாவின் ஒரு தேசிய விவகாரம் என்பதல்ல உண்மை. தமிழரின் தேசிய இனப் போராட்டமே இந்தியாவின் தேசிய விவகாரமாக மாறியுள்ளது. ஆனால் அதை மறைப்பதில் இந்தியா அக்கறையாகவுள்ளது. இந்தியா கூறுவதுபோல், தனியாக புலிகளின் விவகாரமே மட்டுமாக இருப்பின் அது ஒருபோதும் தேசிய விவகாரமாக மாறியிருக்க முடியாது. இந்தியாவில் புலிகளின் நடமாட்டம் உள்ளதெனக் கருதப்படும் தமிழ் நாட்டின் விவகாரமாகவோ, அன்றி அண்டை மாநிலமான கர்நாடக மாநில விவகாரமாகவோ மட்டுமே இருந்திருக்கும்.

இதேவேளை காஷ்மீர், பஞ்சாப் போராட்டங்கள் போன்று இலங்கை தமிழர் தேசியப்போராட்டமும் இந்தியாவின் தேசிய விவகாரமாகக் கருதுமளவிற்கு இந்தியாவின் நலனைப் பாதிக்கும் என இந்திய அதிகார வர்க்கம் கருதுகின்றது. தென்னாசியாவில் உள்ள போராட்ட அமைப்புகளுக்கெல்லாம் முன்மாதிரியான ஒரு போராட்ட அமைப்பாக விடுதலைப் புலிகளின் தலைமை அமைந்துள்ளதே அதற்கான காரணமாகும்.

ஆனால் தமிழரின் தேசிய இனப்போராட்டத்தையும் அதற்கான விடுதலைப் புலிகளின் தலைமையையும் தற்பொழுதுதான் இந்தியா தனது தேசிய விவகாரமாகக் கருதவில்லை. தேசிய இனப்போராட்டம் ஆயுதப் போராட்டமாக வெடித்த காலத்திலேயே இதனையும் இந்தியா தனது தேசிய விவகாரமாகவே அடையாளம் கண்டு கொண்டது ஆனால் அதனை இந்தியா வெளிப்படையாக அறிவிக்கவில்லை.

1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் மூலம் இந்திய இராணுவம் இலங்கை

உலகம் எதிர்பார்த்தது போல் இந்தியா தனது சரித்திரத்தில் முதன் முறையாக சென்றவாரம் இரண்டு முறை பிரித்தானிய பவுணின் பெறுமதிக்கெதிராக 8.76 வீதத்தால் முதன் முறையாகவும், 11.83 வீதத்தால் இரண்டாம் முறையாகவும், தனது நாணயத்தை மதிப்புக் குறைப்புச் செய்தது. மற்றைய மூன்றாம் உலக நாடுகள் சர்வதேச நாணய நிதியம் விதிக்கும் நிபந்தனைகளை ஏற்று அதன் நிர்ப்பந்தங்களுக்கு விட்டுக் கொடுத்து தங்கள் நாணயங்களின் மதிப்பைக் குறைத்துக் கொள்வது போல் இந்தியாவும் சர்வதேச நாணயநிதியத்தின் நிர்ப்பந்தத்தினாலேயே நாணயமதிப்புக் குறைப்புச் செய்தது என்று இதற்கு எதிராக எழுந்த குற்றச்சாட்டை இந்தியப் பிரதமர் திரு நரசிம்மராவும், நிதியமைச்சர் டாக்டர் மன்மோகன் சிங்கும் மறுத்த போதிலும், இதை அவர்களுடைய தீவிர ஆதரவாளர் கூட ஏற்கவில்லை.

தனது அவசர தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உடனடியான உதவிகளைப் பெறுவதற்கு இந்திய அரசாங்கம் தனது கொள்கைகளை மாற்ற ஆயத்தமாகவிருக்கின்றது என்பதை இது எடுத்துக் காட்டுவதாக அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றார்கள். பாரிய பொருளாதாரச்சிக்கல்களை எதிர்கொள்ளும் இந்தியா தனது குறுகிய காலக் கடன்களைச் செலுத்துவதற்கு செல்வந்த நாடுகளிடமிருந்து அதிகமான கடனைப் பெற வேண்டியுள்ளது. இந்தியா சர்வதேச சந்தையில் பெரும் கடன்படுகின்றது. இந்தியா உலக நாணய நிதியத்திடமிருந்து இரண்டுமில்லியன் டொலரை கடனாகக்கேட்டுள்ளது.

இந்தியாவில் புதிய அரசாங்கம் பதவியேற்றதும், உலக வங்கித் தலைவர் திரு. பார்பர் கொனேபிள் அதற்கு அதிக உதவி வழங்க முன்வந்தார். தனது நாட்டின் பொருளாதார கொள்கையைமாற்ற இந்தியா எவ்வளவு அதிகமான முயற்சியை மேற்கொள்கின்றதோ அதையே அளவுகோலாகக் கொண்டு அதற்கு அவ்வளவு கூடுதலான நிதியுதவியை உலக வங்கி வழங்கும் எனவும் அவர் கூறினார்.

உலக வங்கி போன்ற கடன் வழங்கும் சர்வதேச தாபனங்களின் நிர்ப்பந்தங்களுக்கு இந்தியா எத்தளவிற்கு விட்டுக் கொடுக்கும் என்று கூற முடியாது. மற்ற நாடுகளில் தங்கியிராது தங்கள் நாட்டுத் தேவைகளைத் தாங்களே உற்பத்தி செய்து நாட்டை வளமுறச் செய்ய வேண்டும் என்னும் சமதர்ம பொருளாதாரக்

# இந்தியாவின் போக்கில் மாற்றம் ஏற்படுகின்றதா ?

கட்டாயமாக நிபந்தனைகளை விதிக்கவே செய்யும். தற்போது இந்தியாவில் ஒரு சிறுபான்மை அரசாங்கம் ஆட்சிப் பீடத்திலிருப்பதால் தனது திட்டங்களை இது நடைமுறைப்படுத்த முடியாது போகலாம் என சர்வதேச நாணய நிதியம் அச்சமடைவதாக இந்தியாவிலிருந்து வெளிவரும் ஒரு அறிக்கை கூறுகின்றது. நாணயமதிப்புக் குறைப்புச்செய்தமை, இந்திய அரசாங்கம் சர்வதேச நாணயநிதியத்தின் விதிகளை ஏற்றுக் கொள்ள இணங்கியுள்ளதைக் காட்டுவதாக உள்ளது.

பெரும் பொருளாதாரச் சிக்கல்களால் அவதியுறும் இந்தியா தனது விழவுக்குச் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒத்துப்போக வேண்டிய கட்டாய நிலையில் இருப்பதை திரு நரசிம்மராவ் எதிர்க்கட்சி அங்கத்தவர்களுக்கு விளக்கிக் கூறியுள்ள போதும் அதன் நிபந்தனைகளை எல்லா எதிர்க்கட்சிகளும் ஏற்றுக்கொள்ளும் என்று கூறுவதற்கில்லை. இந்தியாவின் பொருளாதார நிலையைப் பற்றி ஒரு வெள்ளையறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு நாணய மதிப்புக் குறைப்புச் செய்யமுன்னரே அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்த பாரதிய ஜனதாக்கட்சி, இப்படியான நிபந்தனைகளுடன் பெறவிருக்கும்கடன், இது தான் கடைசிக்கடனாக இருக்க வேண்டுமென்றும். இதற்குப் பின்னர் நிபந்தனைகளுடன் கூடிய எவ்வித கடனும் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெறப்போவதில்லை எனவும் அரசாங்கம் தனக்கு உறுதிமொழி வழங்க வேண்டும் என்றும், ஒப்பந்தம் கைச்சாத்திடப்படமுன் சர்வதேச நாணய நிதியம் விதிக்கும் நிபந்தனைகள் யாவும் எதிர்க்கட்சியினருடன் கலந்தாலோசிக்கப்பட வேண்டுமென்றும், அப்படிச் செய்தால் மாதி

இந்தச் செலவினத்தைக் குறைப்புச் செய்வது, இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த வழிவகுக்கும்.

தான் எதிர்கொள்ளும் பொருளாதாரச் சிக்கல்களிலிருந்து மீட்சி பெற இந்தியா எந்தவழியை நாடவேண்டுமென்பது பற்றிப்பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். சில மாதங்களுக்கு முன்னர் இந்திய அரசாங்கத்தாலும் இன்னு சிலராலும் ஏற்றுக் கொள்ள முடியாத "இந்திய அமெரிக்க ஒத்துழைப்புகள்" பற்றி இந்துப் பத்திரிகை ஒரு கட்டுரையை சென்றவாரம் வெளியிட்டது. உலகில் தற்போது நிலவும் சூழ்நிலையில் இந்தியா அமெரிக்காவுடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்த விரும்பிய போதிலும் அரசாங்கம் சிறுபான்மை அரசாங்கமாக இருப்பதாலும் காங்கிரஸ் கட்சியிலுள்ளோர் பழமைவாதிகளாக இருப்பதாலும் இந்த முயற்சி தடைப்படலாம் எனப்பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரங்களில் திறமைவாய்ந்த எழுத்தாளர் திரு. சி. ராஜமோகன் இக்கட்டுரையில் கூறுகின்றார். அமெரிக்க மத்திய புலனாய்வுத்துறை அமெரிக்கத் தலையீடு பற்றி இந்திய மக்கள் கொண்டுள்ள தப்பபிப்பிராயத்தை குறைகூறும் இவர். பாதுகாப்பு உட்பட பல துறைகளில் இந்திய - அமெரிக்க உறவுகள் விஸ்தரிக்கப்பட வேண்டுமெனக்கருத்துத் தெரிவிக்கின்றார். புதிய உலக ஒழுங்கு பற்றிக்கூற வந்த இவர் சமாதானத்தை நிலைநாட்டும் பொறுப்பு அமெரிக்காவின் தனிப் பொறுப்பு என்றிராது உலகத்தில் பலவல்லரசுகள் தோன்றவேண்டும் என்பதும் அவற்றுள் அமெரிக்கா அதி சக்தி வாய்ந்ததாகவும் முதன்மை வாய்ந்ததாகவும் இருக்க வேண்டும் என்றும் கூறுகிறார். இந்தியாவின் இறைமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் அமெரிக்கா உத்தரவாதமளிக்குமானால் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கைகளில் பாரிய மாற்றங்களைக் கொண்டுவர வேண்டுமென்றும் இவர் கூறுகின்றார்.

இந்து சமுத்திரப் பகுதியில் முரண்பாடுகளைத் தவிர்த்து ஒத்துழைப்பை வளர்க்க வேண்டுமென அவர் கூறுகின்றார். கெடுபிடிப் போர்க்காலத்தில் இந்து சமுத்திரப் பகுதியில் அமெரிக்க கடற்படை குறித்தும் டியூகோ கார்சியா குறித்த முரண்பாடுகளில் சிறு நியாயம் இருந்தது.

தனது அண்டைய நாடுகளில் அமெரிக்க கேந்திர நலன்கள் இருக்கக்கூடாது என்ற தேவையற்ற நிலைப்பாட்டில் எழுந்தது தான் 1987 இலங்கை இந்திய ஒப்பந்தமாகும்.

கெடுபிடி யுத்தத்தின்போது இந்து சமுத்திரத்தில் மற்ற நாடுகள் தளங்கள் அமைப்பதையும் அவர்களுடைய கடற்படைக்கப்பல்கள் அங்கு நிலைகொண்டிருப்பதையும் எதிர்த்து இந்தியா அது அமைதிப் பிரதேசமாக இருக்க வேண்டுமென்று வாதிட்டு வந்தது. அதன் காரணமாகப் பல நாடுகளைப் பகைத்துக் கொண்டது. ஆனால் இப்போது கெடுபிடி யுத்தம் ஒரு முடிவுக்கு வந்து விட்டதால், இந்து சமுத்திரம் ஒரு அமைதிப்பிரதேசமாக இருக்கவேண்டுமென்ற சர்ச்சையைக் கைவிட்டு மற்ற நாடுகள் அதைப் பாவிக்கத்தக்கதாக ஒத்துழைப்பு வழங்குவதுடன் தனது விஞ்ஞான, தொழில்நுட்ப பொருளாதாரத்துறைகளை முன்னேற்ற அமெரிக்காவுடனும் மற்றைய பலம் பொருந்திய நாடுகளுடனும் ஒத்துழைக்க வேண்டும்.

(தொடரும்)

**காமினி வீரக்கோன்**

> அமெரிக்க - இந்திய உறவுகள் எதிர்காலத்தில் வலுவடையும் என்ற கருத்தைக் கொண்டமைந்துள்ள இக்கட்டுரை மு. திருநாவுக்கரசு அவர்களால் எழுதி வெளியிடப்பட்ட ''புதிய சர்வதேச ஒழுங்கு'' என்ற புத்தகத்தின் கருத்தை ஒத்ததாக உள்ளது.

## 'சார்க்' மாநாடு

## பாதுகாப்பிற்கென

வழங்கி வருகின்றது என செனட்சபையில் ... களிடம் பேசிய இந்தியப் பாதுகாப்பு இணை அமைச்சர் கிருஷ்ணகுமார் தெரிவித்தார்.

இலங்கையில் வடக்கு கிழக்கு பிரதேசங்களின் பிரச்சினையாக ஆரம்பித்து, பின்னர் இலங்கையின் தேசிய பிரச்சினையாகி தற்பொழுது இந்தியாவின் தேசிய பிரச்சினையாகவும் இலங்கைத் தமிழரின் விவகாரம் மாறியுள்ளது. இந்தியாவின் தேசிய பிரச்சினையாக இது மாறியமையால் இதுவொரு தென்னாசியாவின் பிராந்தியப் பிரச்சினை எனவும் திட்டவட்டமாகக் கூறலாம்.

ஆனால் இந்தியா கூறுவதுபோல் புலிகளின் விவகாரம் இந்தியாவின் ஒரு தேசிய விவகாரம் என்பதல்ல உண்மை. தமிழரின் தேசிய இனப் போராட்டமே இந்தியாவின் தேசிய விவகாரமாக மாறியுள்ளது. ஆனால் அதை மறைப்பதில் இந்தியா அக்கறையாகவுள்ளது. இந்தியா கூறுவதுபோல் தனியாக புலிகளின் விவகாரமே மட்டுமாக இருப்பின் அது ஒருபோதும் தேசிய விவகாரமாக மாறியிருக்க முடியாது. இந்தியாவில் புலிகளின் நடமாட்டம் உள்ளதெனக் கருதப்படும் தமிழ் நாட்டின் விவகாரமாகவோ, அன்றி அண்டை மாநிலமான கர்நாடக மாநில விவகாரமாகவோ மட்டுமே இருந்திருக்கும்.

இதேவேளை காஷ்மீர், பஞ்சாப் போராட்டங்கள் போன்று இலங்கை தமிழர் தேசியப்போராட்டமும் இந்தியாவின் தேசிய விவகாரமாகக் கருதுமளவிற்கு இந்தியாவின் நலனைப் பாதிக்கும் என இந்திய அதிகார வர்க்கம் கருதுகின்றது. தென்னாசியாவில் உள்ள போராட்ட அமைப்புகளுக்கெல்லாம் முன்மாதிரியான ஒரு போராட்ட அமைப்பாக விடுதலைப் புலிகளின் தலைமை அமைந்துள்ளதே அதற்கான காரணமாகும்.

ஆனால் தமிழரின் தேசிய இனப்போராட்டத்தையும் அதற்கான விடுதலைப் புலிகளின் தலைமையையும் தற்பொழுதுதான் இந்தியா தனது தேசிய விவகாரமாகக் கருதவில்லை. தேசிய இனப்போராட்டம் ஆயுதப் போராட்டமாக வெடித்த காலத்திலேயே இதனையும் இந்தியா தனது தேசிய விவகாரமாகவே அடையாளம் கண்டு கொண்டது ஆனால் அதனை இந்தியா வெளிப்படையாக அறிவிக்கவில்லை.

1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் மூலம் இந்திய இராணுவம் இலங்கை வந்ததும் தமிழரின் தேசிய இனப் போராட்டத்திற்கு எதிராக நடவடிக்கை எடுத்தமையும் இப் போராட்டத்தை தமது சொந்த விவகாரமாகக் கருதியதினாலேயே ஆகும். ஆனால் அப்பொழுதெல்லாம் இலங்கைத் தமிழர் விவகாரத்தை, இலங்கைத் தீவிற்குட்பட்ட விவகாரமாகவே இந்தியா தெரிவித்துவந்தது. உண்மை நிலையை மறைத்தும் வந்தது.

ஆனால் தற்பொழுது இந்தியா தனது தேசிய விவகாரம் என அறிவிக்கும் அளவிற்கு தமிழர் தேசிய போராட்டம் வளர்ச்சி கண்டுள்ளது. இப் போராட்டத்தை இந்தியா மனம் விரும்பி அறிவிக்கவுமில்லை. தமிழர் தேசிய போராட்டத்திற்கு ஆதரவாகவும் அறிவிக்கவுமில்லை. ஆனால் விரும்பியோ விரும்பாமலோ அறிவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. ஆனால் இவ் அறிவிப்பும் தமிழர் தேசிய போராட்டத்திற்கு எதிரான தொனியிலும், அதற்கெதிரான நடவடிக்கைகளுக்குமாகவே அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தை இந்திய விவகாரமாகக் கருதி அதற்கெதிராக விடுத்த அறிவிப்பானது இந்தியாவில் உள்ள தேசிய இனப் போராட்டங்களுக்கு எதிரான அறிவிப்பாகவும் கொள்ளலாம்.

இந்நிலையில் இலங்கைத் தமிழர் தேசிய போராட்டத்தை இனிமேல் எவரும் ஒரு உள்நாட்டு விவகாரமாகவோ அன்றி தனியொரு நாட்டு விவகாரமாகவோ கருத முடியாது. இது ஒரு பிராந்திய விவகாரமாக, எவராலும் தடுக்க முடியாத அளவிற்கு வளர்ச்சி பெற்றுவிட்டது. இப் பரிணாம வளர்ச்சிப் போக்கில் விரைவில் இப் போராட்டத்தை ஒரு சர்வதேச விவகாரமாக அங்கீகரிப்பதை எவரும் தடுக்க முடியாது. இதற்கான சில சமிக்ஞைகள் மேற்கில் இருந்தும் தெரிய தொடங்கிவிட்டன.

வசதிகளைப் பெறுவதற்கு இந்திய அரசாங்கம் தனது கொள்கைகளை மாற்ற ஆயத்தமாகவிருக்கின்றது என்பதை இது எடுத்துக் காட்டுவதாக அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றார்கள். பாரிய பொருளாதாரச் சிக்கல்களை எதிர்கொள்ளும் இந்தியா தனது குறுகிய காலக் கடன்களைச் செலுத்துவதற்கு செல்வந்த நாடுகளிடமிருந்து அதிகமான கடனைப் பெற வேண்டியுள்ளது. இந்தியா சர்வதேச சந்தையில் பெரும் கடன்படுகின்றது. இந்தியா உலக நாணய நிதியத்திடமிருந்து இரண்டுமில்லியன் டொலரை கடனாகக்கேட்டுள்ளது.

இந்தியாவில் புதிய அரசாங்கம் பதவியேற்றதும், உலக வங்கித் தலைவர் திரு. பார்பர் கொனேபில் அதற்கு அதிக உதவி வழங்க முன்வந்தார். தனது நாட்டின் பொருளாதார கொள்கையைமாற்ற இந்தியா எவ்வளவு அதிகமான முயற்சியை மேற்கொள்கின்றதோ அதையே அளவுகோலாகக் கொண்டு அதற்கு அவ்வளவு கூடுதலான நிதியுதவியை உலக வங்கி வழங்கும் எனவும் அவர் கூறினார்.

உலக வங்கி போன்ற கடன் வழங்கும் சர்வதேச தாபனங்களின் நிர்ப்பந்தங்களுக்கு இந்தியா எந்தளவிற்கு விட்டுக் கொடுக்கும் என்று கூற முடியாது. மற்ற நாடுகளில் தங்கியிராது தங்கள் நாட்டுத் தேவைகளைத் தாங்களே உற்பத்தி செய்து நாட்டை வளமுறச் செய்ய வேண்டும் என்னும் சமதர்ம பொருளாதாரக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதில் பெருமை கொள்ளும் இந்தியா, அது சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து சர்வதேச தாபனங்களின் இப்படியான நிர்ப்பந்தங்களுக்கு விட்டுக் கொடுக்காது நடந்து வந்துள்ளது. நாணய மதிப்புக் குறைப்புச் செய்தல், தனியார் மயப் படுத்தல், சுதந்திரமான இறக்குமதி, வெளிநாட்டு மூலதனத்தை ஊக்குவித்தல் என்பனவே சர்வதேச நாணய நிதியம் விதிக்கும் நிபந்தனைகளாயிருக்கும். சுங்கத் தீர்வையை 117 வீதத்திலிருந்து 20 வீதத்துக்குக் குறைக்குமாறும். கலால் வரியை 50 வீதத்தால் உயர்த்துமாறும், செல்வந்தர்களிடமிருந்து குறைந்தளவு வரியை அறிவிடுமாறும் உலக வங்கி சிபார்சு செய்தல் அவற்றை நாங்கள் ஏற்கப்போகிறோமா? என இந்துப்பத்திரிகையின் நிருபர் ஒருவர் வினவுகின்றார்.

உலக வங்கியின் இப்படியான சிபார்சுகளை இந்திய அரசு ஏற்பது, இந்தியா நான்கு தசாப்தங்களாகக் கடைப்பிடித்து வந்த கொள்கைகளை முற்றாக மாற்றியமைப்பதற்கு வழி வகுக்கும். சர்வதேச நாணய நிதியம் ... பதை திரு நரசிம்மராவ் எதிர்க்கட்சி அங்கத்தவர்களுக்கு விளக்கிக் கூறியுள்ள போதும் அதன் நிபந்தனைகளை எல்லா எதிர்க் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளும் என்று கூறுவதற்கில்லை. இந்தியாவின் பொருளாதார நிலை பற்றி ஒரு வெள்ளையறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு நாணய மதிப்புக் குறைப்புச் செய்யமுன்னரே அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்த பாரதிய ஜனதாக்கட்சி, இப்படியான நிபந்தனைகளுடன் பெறவிருக்கும்கடன், இது தான்கடைசிக்கடனாக இருக்க வேண்டுமென்றும். இதற்குப் பின்னர் நிபந்தனைகளுடன் கூடிய எவ்வித கடனும் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெறப்போவதில்லை எனவும் அரசாங்கம் தனக்கு உறுதிமொழி வழங்க வேண்டும் என்றும், ஒப்பந்தம் கைச்சாத்திடப்படமுன் சர்வதேச நாணய நிதியம் விதிக்கும் நிபந்தனைகள் யாவும் எதிர்க்கட்சியினருடன் கலந்தாலோசிக்கப்பட வேண்டுமென்றும், அப்படிச் செய்தால் மாத்திரமே தம்மனது கட்சி சர்வதேச நாணய நிதியத்தின் விதிகளுக்கு ஆதரவு வழங்கும் என்றும் கூறியுள்ளது.

பாதுகாப்புச் செலவினத்தைக் குறைத்தல், வர்த்தகரீதியில் பல தேசத்தவர்களுக்கு ஈடுபட அனுமதித்தல், அணுசக்தி சம்பந்தமாக அமெரிக்கா விதிக்கும் கட்டுப்பாடுகளுக்கு அமைந்து நடத்தல் ஆகிய சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஏற்றுக் கடனைப் பெற்று இந்தியாவின் எதிர்காலத்தை அடகு வைக்க வேண்டுமா? எனப் பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் மனோகர் ஜோசி கூறியதாக அறியமுடிகிறது.

பொருளாதார சீர்திருத்தங்களில் ஏற்படும் மாற்றம் இந்தியாவின் பாதுகாப்பையும், வெளிநாட்டுக் கொள்கையினையும் பாதிக்கும். இந்த வருடப் பாதுகாப்புச் செலவினத்தை 10 வீதத்தால் குறைக்கும்படி சர்வதேச நாணய நிதியம் இந்தியாவைக் கேட்டுள்ளது. அண்மைக் காலமாக இந்தியாவின் பாதுகாப்புச் செலவினம் வருடா வருடம் கூடிக் கொண்டே வந்துள்ளது.

... அரசாங்கம் இருந்தாலும் அரசாங்கமாக இருப்பதாலும் காங்கிரஸ் கட்சியிலுள்ளோர் பழமைவாதிகளாக இருப்பதாலும் இந்த முயற்சி தடைப்படலாம் எனப்பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரங்களில் திறமைவாய்ந்த எழுத்தாளர் திரு. சி. ராஜமோகன் இக்கட்டுரையில் கூறுகின்றார். அமெரிக்க மத்திய புலனாய்வுத்துறை அமெரிக்கத் தலையீடு பற்றி இந்திய மக்கள் கொண்டுள்ள தப்பபிப்பிராயத்தைக் குறைகூறும் இவர். பாதுகாப்பு உட்பட பல துறைகளில் இந்திய - அமெரிக்க உறவுகள் விஸ்தரிக்கப்பட வேண்டுமெனக்கருத்துத் தெரிவிக்கின்றார். புதிய உலக ஒழுங்குபற்றிக் கூற வந்த இவர் சமாதானத்தை நிலைநாட்டும் பொறுப்பு அமெரிக்காவின் தனிப் பொறுப்பு என்றிராது உலகத்திற் பல வல்லரசுகள் தோன்றவேண்டு ...

அமெரிக்க - இந்திய உறவுகள் எதிர்காலத்தில் வலுவடையும் என்ற கருத்தைக் கொண்டமைந்துள்ள இக்கட்டுரை மு. திருநாவுக்கரசு அவர்களால் எழுதி வெளியிடப்பட்ட ''புதிய சர்வதேச ஒழுங்கு'' என்ற புத்தகத்தின் கருத்தை ஒத்ததாக உள்ளது.

... களில் அமெரிக்க கேந்திர நலன்கள் இருக்கக்கூடாது என்ற தேவையற்ற நிலைப்பாட்டில் எழுந்தது தான் 1987 இலங்கை இந்திய ஒப்பந்தமாகும்.

கெடுபிடி யுத்தத்தின்போது இந்து சமுத்திரத்தில் மற்ற நாடுகள் தளங்கள் அமைப்பதையும் அவர்களுடைய கடற்படைக்கப்பல்கள் அங்கு நிலைகொண்டிருப்பதையும் எதிர்த்து இந்தியா அது அமைதிப் பிரதேசமாக இருக்க வேண்டுமென்று வாதிட்டு வந்தது. அதன் காரணமாகப் பல நாடுகளைப் பகைத்துக் கொண்டது. ஆனால் இப்போது கெடுபிடி யுத்தம் ஒரு முடிவுக்கு வந்து விட்டதால், இந்து சமுத்திரம் ஒரு அமை

**காமினி வீரக்கோன்**

திப்பிரதேசமாக இருக்கவேண்டுமென்ற சர்ச்சையைக் கைவிட்டு மற்ற நாடுகள் அதைப் பாவிக்கத்தக்கதாக ஒத்துழைப்பு வழங்குவதுடன் தனது விஞ்ஞான, தொழில்நுட்ப பொருளாதாரத்துறைகளை முன்னேற்ற அமெரிக்காவுடனும் மற்றைய பலம் பொருந்திய நாடுகளுடனும் ஒத்துழைக்க வேண்டும்

(தொடரும்)

'சார்க்' மாநாடு

## பாதுகாப்பிற்கென விசேட பொலீஸ் செயலகம்

(கொழும்பு)

சார்க் உச்சி மாநாட்டுப் பாதுகாப்புக்கென விசேட பொலிஸ் செயலகம் கொழும்பில் இயங்குகிறது.

கொழும்பு பொலிஸ் தலைமையலுவலகத்தில் விசேட பொலிஸ் செயலகம் ஒன்று முதுநிலை பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜே. டி. எம். ஆரியசிங்க தலைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சார்க் மாநாட்டுப் பாதுகாப்பில் ஈடுபட்டிருக்கும் பொலிஸ் பிரிவுகளை ஒன்றிணைக்கும் பொறுப்பு ஆரியசிங்காவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## அகாலி தள தலைவருக்கு அனுமதி மறுப்பு

(புதுடில்லி)

புதுடில்லியில் நடைபெற்ற தேசியஒருமைப்பாட்டு கவுன்சில் கூட்டத்தில் அகாலிதள் தலைவர் சிம்ரஜ் சிங்மான் கலந்து கொள்ள வந்தபோது அவருக்கான அனுமதி மறுக்கப்பட்டது.

அவர்தான் கொண்டுவந்த நீண்டவாளைவெளியே விட்டு வர மறுத்த காரணத்தினாலேயே கூட்ட மண்டபத்திற்குள் அனுமதிக்கப் படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

## அனலைதீவில் இருவர் ராணுவத்தால் சுட்டு கொலை

(அனலைதீவு)

அனலைதீவுக் கிராமத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் இருவரைச் சுட்டுக் கொன்றிருப்பதாக தெரியவந்துள்ளது.

அனலைதீவு வாசிகளான இவர்கள் இருவரையும் கடந்த வியாழனன்று அங்கு வைத்தே சுட்டுக் கொன்றனர் எனவும் தெரியவருகிறது.

# கலையும் இசையும் விடுதலையை முழுமை பெறச் செய்கின்றன

— அன்ரன் பாலசிங்கம்

(யாழ்ப்பாணம்)

கலையும், இசையும் விடுதலை எழுச்சியை முழுமை பெறச் செய்கிறது. எமது தேசிய விடுதலைப் போராட்டத்துடன் இவை இணைந்துள்ளன.

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தால் நேற்று யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் வெளியிடப்பட்ட 'இசையருவி' இசை நாடா வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு பேசும்போது விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த இசை நாடாவை வெளியிட்டு வைத்து அவர் மேலும் உரை நிகழ்த்தும் போது,

உலகத்தின் பல அழுத்தங்களிலிருந்து விடுவித்துக் கொள்வதற்காக மனிதன் போராடி வந்துள்ளான்.

மனிதன், அகரீதியாகவும் புற ரீதியாகவும் அழுத்தங்களிலிருந்து விடுபடும் போது அவன் முழுமையான விடுதலையைப் பெறுகிறான் என்றார்.

விடுதலைப் புலிகளின் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா அங்கு பேசும் போது நாட்டு மக்களின் வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் இசை பயன்படுகிறது. கலைகளில் இசைக்கலை மிக உயர்ந்தது. உன்னதமானது என்றார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் யோகரட்ணம்(யோகி) பேசும் போது கலைஞர்கள்தான் தமிழைப் பாதுகாக்கிறார்கள் காப்பாற்றுகிறார்கள். நாட்டை அமைப்பதில் எங்களுக்கு எவ்வளவு அவசியமுண்டோ அதே அளவு தேவை கலைகளை வளர்ப்பதிலும் உண்டு என்றார்.

யாழ் மாவட்ட விசேட தளபதி திரு. தமிழ்ச் செல்வன் இசைக்கலைஞர்களுக்கு பரிசுகள் வழங்கி கௌரவித்தார்.

கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் சம்பன்கழக அமைப்பாளர் ஜெராஜ் உட்பட மேலும் பலர் சிறப்புரையாற்றினர். (தி)

## செட்டியார் குறிச்சியில் இராணுவம்மீது தாக்குதல்

பூநகரியில் உள்ள செட்டியார் குறிச்சிப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர். நேற்று நடைபெற்ற இத்தாக்குதலின்போது விடுதலைப்புலிகள் 82 எம். எம். எறிகணைகள் கொண்டு கடும் தாக்குதல்கள் நடாத்தினர். இத்தாக்குதலின்போது இராணுவத்தினருக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

## பூநகரியில் மூன்று பெண்கள் இராணுவத்தால் மானபங்கம்

(யாழ்ப்பாணம்)

பூநகரிப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் மூன்று தமிழ் பெண்களைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியுள்ளனர்.

கடந்த 22ஆம் திகதி பூநகரியில் உள்ள வெட்டுக்காடு, சின்னகாரத்தோப்பு, பிள்ளையார் புரம் ஆகிய பகுதிகளிலிருந்து மூன்று பெண்கள் இராணுவத்தினால் கைதுசெய்யப்பட்டு பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

அத்துடன் மேற்படி பகுதிகளில் சிக்கியிருக்கும் வயோதிபர்களையும் இராணுவத்தினர் கடுமையாகத் தாக்கி துன்புறுத்திவருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## எறிகணை வீச்சிற்கு ஆனையிறவில் நால்வர் பலி

ஆனையிறவிலுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுக்காலை பொதுமக்கள் வாழும் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி பத்துக்கும் மேற்பட்ட எறிகணைகளை வீசியுள்ளனர். இவ் எறிகணைகள் ஆனையிறவு முகாமின் புறப்பகுதிகளில் விழுந்து வெடித்ததையடுத்து நால்வர் மரணமடைந்துள்ளனர்.

ஆனையிறவு முகாம் பகுதியிலிருந்து தினமும் மாலை வேளைகளில் பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை நடத்திவருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

## மரண அறிவித்தல்கள்

### சிங்கராஜா றோசம்மா (றோசா)

திருமதி சிங்கராஜா றோசம்மா காலமானார் இவர் சிங்கராஜாவின் அன்பு மனைவியும், அரியமலர், செல்வராணி, புஸ்பராணி, அன்ரனி, றஞ்சினி, இந்திரா, றோகினி, யேசுதாசன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத்தாயாரும் அன்னம்மா, பொன்னுத்துரை, காலஞ்சென்ற திரேசம்மா, ஆகியோரின் அன்புச் சகோதரியும் தங்கராஜா, இராஜேந்திரம், அன்னராஜா, திருமதி அன்ரனி (ஆசிரியை சென். ஜோசவ் வித்தியாலயம் கொழும்புத்துறை), மரியநாயகம், குணம், பெனடிக்ற் ஆகியோரின் மாமியாரும் மரியாம்பிள்ளை, செல்லம்மா, அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் மைத்...

குண்டுத்

பகிரங்கமாகவும், நேரடியாகவும் குற்றம்சாட்டியுள்ளார்.

இக்குண்டுவெடிப்புச் சம்பவத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடையே பேசிய முன்னாள் அமைச்சர் திசநாயக்க மேலும் பேசுகையில் அரசு கொலைப்படை மூலம் தம்மைக் கொலை செய்ய முற்பட்டுள்ளது எனவும், இச் சம்பவம் அறப்போரைத் தடுக்க பிரேமதாசா அரசு மேற்கொண்ட திட்டமிட்ட சதி எனவும் குறிப்பிட்டார். தமது உயிருக்கு ஆபத்து இருப்பதாக ஐ. தே. க. அதிருப்தியாளர்கள் கூறிவருவது தெரிந்ததே.

அதிருப்தியாளர்

பட்ட இப்பேரணியில் குண்டு...

## 5000 நிருபர்கள் மட்றிட்டில்

(மட்றிட்)

மத்திய கிழக்கு சமாதான மாநாடு தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்கென சுமார் 5000 நிருபர்களும் புகைப்படப்பிடிப்பாளர்களும் மட்றிட் வந்திருந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

### அம்பாறை, மட்டக்களப்பில்

## பொதுமக்கள்மீது தாக்குதல் இருவர் பலி; தீவைப்பு

(மட்டக்களப்பு)

அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் சிறிலங்கா இராணுவத்தினரது தமிழ்மக்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துவருகின்றன.

நேற்று முன்தினம் இவ்விரு மாவட்டங்களிலும் இருந்து சுமார் பத்துப்பொதுமக்களை சிறிலங்கா இராணுவத்தினர் கைது செய்து அடித்துத் துன்புறுத்தியதுடன் மேலும் இருவரைச் சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

மேலும் கடந்த 29 ஆம் திகதி அம்பாறை மாவட்டத்தில் உள்ள 16 ஆம் கொலனியில் அமைந்துள்ள இராணுவமுகாமில் இருந்து பல பிரிவுகளாக புறப்பட்டுவந்த சிறிலங்கா இராணுவத்தினர் 39, 40 ஆம் கிராமங்களைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தியதுடன் பொதுமக்களுக்குச் சொந்தமான 15 வீடுகளையும், 5 கடைகளையும், ஒரு அரிசி ஆலையையும் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். மேலும் ஒரு வீட்டில் இருந்து பணம் பெறுமதிமிக்க பொருட்கள் பலவற்றையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

தொண்டமானின்

யின் இவ்வாறு அறிவித்துள்ளார்கள் என்று சண்டே ஒப்சேவர் மேலும் தெரிவிக்கிறது

இரு மாதங்களுக்கு முன்பு தான் பேச்சுவார்த்தைகளுக்கு அழைப்பு விடுத்த பின்பு புலிகள் இதற்குத் தகுந்த பதிலை இதுவரை வழங்கவில்லை என்றும், புலிகள்தாம் முன்னெடுத்துச் செல்லும் போரில் உறுதியாகஇருப்பதாகத் தான் கருதுவதாகத் தொண்டமான் கூறுகிறார்.

புலிகளைத் தாம் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கும் காலம் நெருங்கிவிட்டதென்று இராணுவதரப்பில்கூறப்பட்ட போதிலும்புலிகள் ஆங்காங்கே தாக்குதல்களைத் தொடர்ந்து மேற்கொண்டுவருவதாக அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை அமைச்சர் தொண்டமானின்பேச்சுவார்த்தைக்கான அழைப்பை புலிகள் உத்தியோகபூர்வமாக இன்னும் மறுக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

வடக்கில்

வெற்றிகொள்ளமுடியவில்லை

கிழக்கில் அண்மையில் விடுதலைப் புலிகள் பல தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு சிறிலங்கா இராணுவத்தையும் வெற்றி கொண்டுள்ளனர் என்று அச்செய்தி மேலும் தெரிவித்தது.

3500 மாவீரர்களின்

போராளிகளையும் மாவீரர் வாரத்தில் ஒரே நேரத்தில் நினைவுகூர வேண்டியதும் கௌரவிக்க வேண்டியதும்...

## துவிச்சக்கர வியாபாரிகள் வருகை தொடங்கியது

(யாழ்ப்பாணம்)

துவிச்சக்கர வண்டி வியாபாரிகள் கொம்படிப் பாதையூடாக அத்தியாவசியப் பொருள்கள் பலவற்றை குடாநாட்டுக்குள் எடுத்துவரத் தொடங்கியுள்ளனர்.

கடந்த சிலநாட்களாக மேற்படி பாதையூடாக குடாநாட்டுக்குள் வந்துசேரும் துவிச்சக்கர வண்டி வியாபாரிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அரிசி, மா, சீனி, தேங்காய் போன்ற பல்வேறு அத்தியாவசியப் பொருள்களை மேற்படி வியாபாரிகள் எடுத்துவருகின்றனர்.

நேற்றுமட்டும் குறிப்பிடத்தக்க அளவு துவிச்சக்கரவண்டி வியாபாரிகள் அத்தியாவசியப் பொருள்களுடன் குடாநாட்டிற்குள் வந்துசேர்ந்தனர்.

## முன்னோடிப் பரீட்சை; வினாத்தாள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

சகல கோத்தணி அலுவலகங்களிலும் இன்று (திங்கள்) மாலை 4.00 மணிக்கு க. பொ. த. சாதாரண தர முன்னோடிப் பரீட்சை - 1991 வினாத் தாள்கள் விநியோகிக்கப்படும் என்று யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இவற்றை பொறுப்பேற்க அதிகாரிகளை அலுவலகங்களில் நிற்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில் 25-10-1972



தாயக மண்ணில் 22-9-1991

### 2ஆம் லெப். சனத்

(செபஸ்ரியாம்பிள்ளை ஜெயசிலன்)

கட்டைநகர் பிறந்து காவல்தனைப்புரிந்து
கன்னியநாய் வீட்டினிலே கனிவுடனே பழகிவந்து
பெற்றோரின் பிணைப்புடனே பேருதவி நல்கிவந்து
பெருமையில்லா உன் தோழரின் பெருமைப்புகழை நாட்டி...

# இராணுவத்தால் மானபங்கம்

(யாழ்ப்பாணம்)

பூநகரிப் பகுதியில் நிலை கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் மூன்று தமிழ்ப் பெண்களைப் பாலியல் வன்முறைக்குட்படுத்தியுள்ளனர்.

கடந்த 22ஆம் திகதி பூநகரியில் உள்ள வெட்டுக்காடு, சிங்காரத்தோப்பு, பிள்ளையார்புரம் ஆகிய பகுதிகளிலிருந்து மூன்று பெண்கள் இராணுவத்தினால் கைதுசெய்யப்பட்டு பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

அத்துடன் மேற்படி பகுதிகளில் சிக்கியிருக்கும் வயோதிபர்களையும் இராணுவத்தினர் கடுமையாகத் தாக்கி துன்புறுத்திவருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# எறிகணை வீச்சிற்கு ஆனையிறவில் நால்வர் பலி

ஆனையிறவிலுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுக்காலை பொதுமக்கள் வாழும் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி பத்துக்கும் மேற்பட்ட எறிகணைகளை வீசியுள்ளனர். இவ் எறிகணைகள் ஆனையிறவு முகாமின் புறப்பகுதிகளில் விழுந்து வெடித்ததனால் நால்வர் மரணமடைந்துள்ளனர்.

ஆனையிறவு முகாம் பகுதியிலிருந்து தினமும் மாலை வேளைகளில் பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை நடத்திவருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

## மரண அறிவித்தல்கள்

### சிங்கராஜா றோசம்மா (றோசா)

திருமதி சிங்கராஜா றோசம்மா காலமானார் இவர் சிங்கராஜாவின் அன்பு மனைவியும், அரியமலர், செல்வராணி, புஸ்பராணி, அன்ரனி, றஞ்சினி, இந்திரா, றோகினி, யேசுதாசன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத்தாயாரும் அன்னம்மா, பொன்னுத்துரை, காலஞ்சென்ற திரேசம்மா, ஆகியோரின் அன்புச் சகோதரியும் தங்கராஜா, இராஜேந்திரம், அன்னராஜா, திருமதி அன்ரனி (ஆசிரியை சென். ஜோசவ் வித்தியாலயம் கொழும்புத்துறை), மரியநாயகம், குணம், பெனடிக்ற் ஆகியோரின் மாமியாரும் மரியாம்பிள்ளை, செல்லம்மா, அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும் ஆவர்,

அன்னாரின் பூதவுடல் 04-11-91 திங்கட்கிழமை (இன்று)காலை 8·30 மணிக்கு அன்னாரின் மானிப்பாய் இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக மானிப்பாய் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தகவல் :

சங்கிலி லேன், மானிப்பாய். (R/1904) சி. ஜோசவ் அன்ரனி (மகன்)

### வாமதேவன் விக்னேஸ்வரன் (பாபு) காரைநகர்

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வாமதேவன் மங்கையர்க்கரசி ஆகியோரின் புதல்வனும் நவரத்தினராஜா, குமாரதேவன், பத்மினி, வசந்தி ஆகியோரின் சகோதரருமான விக்னேஸ்வரன் (பாபு) 23-07-91 அன்று மரணமெய்திவிட்டார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

மாரீசன் கூடல் கலடு, இளவாலை.

தகவல்: ஆ. திருநாவுக்கரசு (சிறிய தந்தை)

(R/1903)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் யோகரட்ணம்(யோகி) பேசும் போது கலைஞர்கள்தான் தமிழ் மொழியைப் பாதுகாக்கிறார்கள் காப்பாற்றுகிறார்கள். நாட்டை அமைப்பதில் எங்களுக்கு எவ்வளவு அக்கறையுண்டோ அதே அளவு தேவை கலைகளை வளர்ப்பதிலும் உண்டு என்றார்.

யாழ் மாவட்ட விசேட தளபதி திரு. தமிழ்ச் செல்வன் இசைக்கலைஞர்களுக்கு பரிசுகள் வழங்கி கௌரவித்தார்.

கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் சம்பன்கழக அமைப்பாளர் ஜெயராஜ் உட்பட மேலும் பலர் சிறப்புரையாற்றினர். (தி)

குண்டுத்

பகிரங்கமாகவும், நேரடியாகவும் குற்றம்சாட்டியுள்ளார்.

இக்குண்டுவெடிப்புச் சம்பவத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடையே பேசிய முன்னாள் அமைச்சர் திசநாயக்க மேலும் பேசுகையில் அரசு கொலைப்படை மூலம் தம்மைக் கொலை செய்ய முற்பட்டுள்ளது எனவும், இச்சம்பவம் அறப்போராட்ட அடுக்க பிரேமதாசா அரசு மேற்கொண்ட திட்டமிட்ட சதி எனவும் குறிப்பிட்டார். தமது உயிருக்கு ஆபத்து இருப்பதாக ஐ.தே.க. அதிருப்தியாளர்கள் கூறிவருவது தெரிந்ததே.

அதிருப்தியாளர்

பட்ட இப்பேரணியில் குண்டு வெடிப்பு ஏற்பட்டதால் பல வாகனங்களும் பலத்த சேதமடைந்துள்ளனவென்றும் தெரிய வருகிறது.

குண்டுகளை வீசியவர்கள் இலக்கத்தகடு இல்லாத ஜீப் ஒன்றில் தப்பிச் சென்றதைப் பொதுமக்கள் கண்டதாக ஏஜென்சி செய்திகள் கூறியுள்ளன.

பொருள்கள்

வதற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் அமைக்கப்பட்டிருக்கும் பாவனையாளர் பாதுகாப்புக்குழுக்கள் மூலமும் கூட்டுறவுச்சங்கங்கள் மூலமும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (க)

விரில் இவ்வாறு அறிவித்துள்ளார்கள் என்று சண்டே ஒப்சேவர் மேலும் தெரிவிக்கிறது

இரு மாதங்களுக்கு முன்பு தான் பேச்சுவார்த்தைகளுக்கு அழைப்பு விடுத்த பின்பு புலிகள் இதற்குத் தகுந்த பதிலை இதுவரை வழங்கவில்லை என்றும், புலிகள்தாம் முன்னெடுத்துச் செல்லும் போரில் உறுதியாகஇருப்பதாகத் தான்கருதுவதாகத் தொண்டமான் கூறுகிறார்.

புலிகளைத் தாம் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கும் காலம் நெருங்கிவிட்டதென்று இராணுவதரப்பிற்கூறப்பட்ட போதிலும்புலிகள் ஆங்காங்கே தாக்குதல்களைத் தொடர்ந்து மேற்கொண்டுவருவதாக அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை அமைச்சர் தொண்டமானின்பேச்சுவார்த்தைக்கான அழைப்பை புலிகள் உத்தியோகபூர்வமாகஇன்னும் மறுக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

வடக்கில்

வெற்றிகொள்ளமுடியவில்லை

கிழக்கில் அண்மையில் விடுதலைப் புலிகள் பல தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு சிறிலங்கா இராணுவத்தையும் வெற்றி கொண்டுள்ளனர் என்று அச்செய்தி மேலும் தெரிவித்தது.

3500 மாவீரர்களின்

போராளிகளையும் மாவீரர் வாரத்தில் ஒரே நேரத்தில் நினைவுகூரவேண்டியதும் கௌரவிக்க வேண்டியதும் தமிழீழ மக்கள் அனைவரதும் தலையாய கடமையாகும்.

எமது விடுதலைப் போராட்டத்தில் போர் முனைகளில் புலிபோலப் பாய்ந்தவர்கள் எதிரியை விரட்டி அடிக்க வென களத்திலே வீழ்ந்து வெற்றிகளைத் தந்தவர்கள் மக்களுடைய விடுதலைக்கும் உறுதிக்கும் முன் உதாரணமாக இறந்தவர்கள் இவர்கள் அனைவரையும் ஒருமித்து இம் மாவீரர் நாளில் இவ் வீரர்களின் இலட்சிய அறைகூவலை உணர்வு பூர்வமாக ஏற்று விடுதலைப் பணியில் எம்மையும் இணைத்துக் கொள்வோம் என்றும் அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னியிலுள்ள பெருமக்களுக்குச் சொந்தமான 15 வீடுகளையும், 5 கடைகளையும், ஒரு அரிசி ஆலையையும் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர் மேலும் ஒரு வீட்டில் இருந்து பணம் பெறுமதிமிக்க பொருட்கள் பலவற்றையும் கொள்ளை அடித்துச் சென்றுள்ளனர்.

மாலை 4.00 மணிக்கு க. பொ. த. சாதாரண தர முன்னோடிப் பரீட்சை - 1991 வினாத் தாள்கள் விநியோகிக்கப்படும் என்று யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இவற்றை பொறுப்பேற்க அதிகாரிகளை அலுவலகங்களில் நிற்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில் 25-10-1972



தாயக மண்ணில் 22-9-1991

### 2ஆம் லெப். சனத்

(செபஸ்ரியாம்பிள்ளை ஜெயசிலன்)

கட்டைநகர் பிறந்து காவல்தனைப்புரிந்து
கண்ணியமாய் வீட்டினிலே கனிவுடனே பழகிவந்து
பெற்றோரின் பிணைப்புடனே பேருதவி நல்கிவந்து
பெருமையில்லா உன் போக்கால் பெரும்புகழை சூட்டி வைத்தாய்

ஜெயசிலா உன்புகழை ஜெகத்தினிலே பரப்பிவிட
சென்மேரிஸ் கழகத்தில் சரபந்து, உதைபந்து களிப்புடனே ஆடிவந்தாய்
கழகத்தின் ஆர்வமதால் கண்ணயரா சிறப்புடனே
விளையாட்டின், உத்திகளை உயர்த்திவிட்ட உத்தமனே

உலகமென்ற போர்க்களத்தில் சுகபோகம் பலதுறந்து
சுமைமான் பல இறக்கி வைத்து சுறுசுறுப்பாய் போர் புரிந்து
சுவையான தமிழ்மொழியை சுட்டெரிக்கும் எதிரிகளை
எங்கள் தமிழீழமதில் இயன்றவரை அகற்றிவிட
ஆர்வமுள்ள வேங்கைகளின் அன்புக்கரம் பற்றிவிட்டாய்
[illegible] ஈழமக்கள் பத்துடனே வாழ்ந்திடவே
பாசறையை நோக்கி நீயும் பற்றுடனே சென்றுவிட்டாய்

பலகாலம் போர்புரிந்து புலிவீரர் புகழ் பரப்பி
புலிக்கும் போர் முரசை புலி வீரர் அதிரவைக்க
புயல் போல மணலாற்றில் புகுந்து நீ போர் புரிந்து
புறமுதுகு காட்டாது புகழ்மண்ணைப் பெற்றுவிட
பெருமையுடன் மரணத்தை மாலையாய் ஏற்றுவிட்டாய்
மறவா! உன் புகழை மனதினிலே பதிவைத்தும்
மங்காத உன்புகழால் மனநெகிழ்ச்சி கொண்டுவிட்டோம்
மறந்திடோம் உன்வீரம் மண்மீட்கும் பணிதொடரும்
போய் வருவாய் எம்தோழா போற்றி வணங்குகிறோம்!

இவர்களின் ஆத்மசாந்திக்காக 4-11-91 இன்று திங்கள் மாலை 5 மணிக்கு தாளையடி புனித அந்தோனியார்ஆலயத்தில்திருப்பலி நடைபெறும்

இவருடன் வீரமரணமடைந்த அனைத்து போராளிகளுக்கும் எமது வீர அஞ்சலிகள்!

கட்டைக்காடு, முள்ளியான். (R/1902) சென்மேரிஸ் விளையாட்டுக் கழகம்

## தையல்காரர் தேவை

தமிழீழ காவல் துறையினருக்கு அனுபவம் வாய்ந்த தையல்காரர் உடன்தேவை.

நேரடியாக விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
தமிழீழ காவல் துறை செயலகம்
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

பொறுப்பாளர், தமிழீழ காவல் துறை

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 04ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.